# தாளியூர் சிறப்புநிலை பேரூராட்சி
# கோயம்புத்தூர் மாவட்டம்

## ஒப்பந்தபுள்ளி அறிவிப்பு

**ந.க. எண்.325/2022** **நாள் : 22.07.2022**

கோயம்புத்தூர் மாவட்டம், தாளியூர் சிறப்புநிலை பேரூராட்சியில் 2021-2022-ம் ஆண்டு 15வது நிதிக்குழு மானியம் (இரண்டாம் தவணை) திட்டத்தின் கீழ் பின்வரும் வேலையை செய்வதற்கு கீழ்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு பூர்த்தி செய்த ஒப்பந்தப்புள்ளிக்கான ஒப்பந்த அட்டவணை படிவங்களை 04.08.2022 வியாழக்கிழமை மாலை 5.00 மணி வரை விண்ணப்பம் செய்து பெற்றுக் கொள்ளலாம். ஒப்பந்தப்புள்ளிகள் தாளியூர் பேரூராட்சி செயல் அலுவலராலோ அல்லது அவரது அதிகாரம் பெற்றவராலோ 05.08.2022-ம் தேதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.00 மணி வரை அரக்கு மூடி முத்திரையிட்ட உறையின் வழி பேரூராட்சி அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளப்படும்.

**15வது நிதிக்குழுத் திட்டம் 2021-2022(இரண்டாம் தவணை)**

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு (ரூ.லட்சத்தில்) | செலுத்த வேண்டிய முன்வைப்பு தொகை (2%) ரூ. | ஷெட்டியூல் படிவ கட்டணம் ரூ. | வேலை முடிக்க வேண்டிய காலம் |
|---|---|---|---|---|---|
| A | **15வது நிதிக்குழுத் திட்டம் (UNTIED GRANT)** | | | | |
| 1 | தாளியூர் பேரூராட்சிக்குட்பட்ட குளத்துப்பாளையம் பகுதியில் 60,000 கொள்ளளவு கொண்ட கீழ்நிலை நீர் தேக்கத்தொட்டி கட்டிதல். | 9.50 | 19,000/- | 1770/- | 4 மாதங்கள் |
| B | **15வது நிதிக்குழுத் திட்டம் (TIED GRANT)** | | | | |
| 1 | **குடிநீர் விநியோகப் பணி** தாளியூர் பேரூராட்சிக்குட்பட்ட தீனம்பாளையம் முதல் குளத்துப்பாளையம் வரை குடிநீர் குழாய் விஸ்தரிப்பு செய்தல். | 11.00 | 22,000/- | 7080/- | 4 மாதங்கள் |
| 2 | **சுகாதாரம்/திடக்கழிவு மேலாண்மை பணி** தாளியூர் பேரூராட்சிக்குட்பட்ட வார்டு எண்.14 கலிக்கநாயக்கன்பாளையம் அரிஜன காலனியில் உள்ள பொது கழிப்பிடத்திற்கு பராமரிப்பு பணி மற்றும் புதியதாக செப்டிக் டேங்க் கட்டுதல். | 7.00 | 14,000/- | 1770/- | 4 மாதங்கள் |

Scanned By Camera Scanner

## நிபந்தனைகள்

1. ஒப்பந்தப்புள்ளிகள் 05.08.2022 அன்று பிற்பகல் 3.00 மணி வரை மட்டுமே பெற்றுக் கொள்ளப்படும். குறிப்பிட்ட நேரத்திற்கு பிறகு பெறப்படும் ஒப்பந்தப்புள்ளிகள் திறக்கப்படாமல் ஒப்பந்தப்புள்ளி அளித்தவருக்கே திருப்பி அனுப்பப்படும். மேற்குறிப்பிட்டவாறு ஒப்பந்தப்புள்ளி பெறுவதற்கு குறிப்பிடப்பட்ட இறுதி நாளில் விடுமுறை அறிவிக்கப்படுமாயின் அதற்கடுத்த அலுவலக வேலை நாளில் மேற்குறிப்பிட்ட அதே நேரத்தில் ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்படும்.

2. பெறப்பட்ட அனைத்து ஒப்பந்தப்புள்ளிகளும் 05.08.2022 அன்று பிற்பகல் 3.30 மணிக்கு தாளியூர் பேரூராட்சி அலுவலகத்தில் வருகை தந்துள்ள ஒப்பந்ததாரர்களின் முன்னிலையில் தாளியூர் பேரூராட்சி செயல் அலுவலராலோ அல்லது அவரால் அனுமதிக்கப்பட்ட அலுவலராலோ திறக்கப்படும். மேற்குறிப்பிட்ட நாளன்று விடுமுறை அறிவிக்கப்படுமாயின் அதற்கடுத்த அலுவலக வேலை நாளில் மேற்குறிப்பிட்ட அதே நேரத்தில் ஒப்பந்தப்புள்ளிகள் திறக்கப்படும்.

3. ஒப்பந்தப்புள்ளிகள் ஏற்றுக் கொள்ளப்படாதபட்சத்தில் ஒப்பந்ததாரர்களின் முன் வைப்புத் தொகை (EMD) ஒப்பந்தப்புள்ளிகளை ஏற்றுக் கொள்வதற்கான காலம் முடிவடைந்த 28 நாட்களுக்குள் திரும்ப அளிக்கப்படும்.

4. பொதுவாக தகுதிகளின் அடிப்படையில் குறைந்த விலை குறிப்பிட்டுள்ள ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளிகள் ஏற்றுக்கொள்ளப்படும். அப்போது ஒப்பந்ததாரர் ஏற்கனவே செலுத்தியுள்ள 1% முன் வைப்புத் தொகையுடன் ( EMD ) மேலும் கூடுதலாக ஒப்பந்த மதிப்பில் 4% தொகையினை பாதுகாப்பு வைப்புத் தொகையாக ( Security Deposit ) பட்டியலில் பிடித்த. செய்யப்படும்.

5. ஒப்பந்தப்புள்ளிகள் ஏற்கப்படாதவரையில் சட்ட வகைகளுக்குட்பட்டு, எந்தநேரத்திலும் எந்தவொரு ஒப்பந்தப்புள்ளியையும் ஏற்கவோ அல்லது நிராகரிக்கவோ மற்றும் ஒப்பந்த நடைமுறைகளை ரத்து செய்யவோ அல்லது அனைத்து ஒப்பந்தப்புள்ளிகளையும் நிராகரிக்கவோ பேரூராட்சி மன்றத்திற்கு அதிகாரம் உள்ளது.

6. பொறியியல் விதிமுறைப்படி பணிக்கான ஒப்பந்த காலத்திற்குள் பணியினை ஒப்பந்ததாரர் மந்தமான முறையில் மிக மெதுவாக பணியில் முன்னேற்றம் காண்பிக்கும் பட்சத்தில் (Penalty for Slow Progress) அபராதம் ஒப்பந்த மதிப்பில் 5% விதித்து பட்டியல் தொகையில் ஈடுசெய்யப்படும்.

7. பணி மேற்கொள்வதற்கு முன் நிலையிலும், பணியின் ஒவ்வொரு கட்டத்திலும் மேக்ஸ் அளவில் புகைப்படங்கள் எடுத்து கட்டாயம் பட்டியலுடன் தாக்கல் செய்ய வேண்டும்.

8. பணி குறித்த விபரங்கள் அடங்கிய தரமான பலகைகள் 4 அடி x $2^{1/2}$ அடி (1.20m x 0.75m) அளவில் வைக்கப்பட்டு அதனை புகைப்படம் (Digital Photo) எடுத்து, இப்பேரூராட்சி அலுவலகத்தில் ஒப்படைக்க வேண்டும்.

9. பணி மேற்கொள்ளவிருக்கும் இடத்தினை பணி ஆரம்பிப்பதற்கு முன்னரும், பணி நடைபெறும் போதும் மற்றும் பணி முடிந்த பின்னரும் புகைப்படம் (Digital Photo) எடுக்கப்பட்டு ஆவணப்படுத்தப்பட வேண்டும். எடுக்கப்படும் மூன்று புகைப்படமும் ஒரே இடத்தை (Same Location) காட்டும்படியாக இருத்தல் வேண்டும்.

10. ஒவ்வொரு மாதமும் செய்யப்பட்டுள்ள பணிகளை பொறுத்து பட்டியல் தொகை வழங்கப்படும்.

11. ஒப்பந்ததாரருக்கு வழங்கப்படும் ஒவ்வொரு பட்டியலில் இருந்தும் 5% பிணை வைப்புத் தொகையாக ( Retention ) பிடித்தம் செய்யப்படும். அவ்வாறு பிடித்தம் செய்யப்படும் 5 சதவிகிதத்தில் 2.5 சதவிகிதத் தொகை பணிக்கான பணி முடிவு அறிக்கை வழங்கப்பட்டு 6 மாத காலத்திற்கு பிறகு விடுவிக்கப்படும். மீதமுள்ள 2.5 சதவிகிதத் தொகையினை குறைபாடுகளை சரிசெய்வதற்காக அதாவது தார் சாலை பணிக்கு மூன்று வருட காலம் வைத்துக் கொள்ளப்படும். மேற்படி காலத்தில் பணிகளில் குறைபாடுகள் ஏதுமில்லாத பட்சத்தில் அத்தொகை செயல் அலுவலரால் விடுவிக்கப்படும்.

Scanned By Camera Scanner

12. ஒப்பந்த தொகையில் 1% தொகைக்கு கட்டிட தொழிலாளர் நலநிதிக்கான வங்கி கேட்பு வரைவோலையினை பணி வழங்குவதற்கு முன்னர் பேரூராட்சியில் ஒப்படைக்கப்பட வேண்டும். அவ்வாறு ஒப்படைக்காத பட்சத்தில் மேற்படி தொகை பட்டியலில் பிடித்தம் செய்யப்பட்டு உரிய துறைக்கு E.C.S மூலம் தொகை செலுத்தப்படும்.

13. ஒவ்வொரு பட்டியல்களிலும் அரசு விதிமுறைகளின்படி வருமானவரி மற்றும் **சரக்கு மற்றும் சேவைவரித் (GST) 18%** தொகை பிடித்தம் செய்யப்பட்டு சம்பந்தப்பட்ட துறைகளில் செலுத்தப்படும்.

14. ஒப்பந்தப்புள்ளி ஏற்கப்பட்ட ஒப்பந்ததாரர்கள் ஒப்பந்த நிபந்தனைகளுக்குப்பட்டு ரூ.20/-க்கான முத்திரை தாளில் செயல் அலுவலருடன் ஒப்பந்தம் செய்து கொள்ள வேண்டும்.

15. இத்திட்டப்பணிகள் முடிக்கப்பட்டவுடன் **மூன்று ஆண்டுகளுக்கு** குறையாத காலத்திற்கு இப்பணிகளில் ஏற்படும் குறைபாடுகளை இப்பணியினை மேற்கொள்ளும் ஒப்பந்ததாரரே தனது சொந்த செலவிலேயே சீரமைத்து தரப்படல் வேண்டும்.

16. ஒப்பந்தப்புள்ளிகள் அளிப்பது குறித்து வேறு ஏதேனும் தெளிவுரைகள் வேண்டுமாயின் தாளியூர் பேரூராட்சி அலுவலகத்தில் அலுவலக வேலை நாட்களில் வேலை நேரத்தில் கேட்டு தெரிந்து கொள்ளலாம்.

17. முன் வைப்புத் தொகை (EMD) செலுத்தப்பட்டதற்கான அத்தாட்சி ஒப்பந்தப்புள்ளியுடன் இணைக்கப்பட வேண்டும்.

22/7/2022

**செயல் அலுவலர்**
**தாளியூர் சிறப்புநிலை பேரூராட்சி**
**கோயம்புத்தூர் மாவட்டம்**

22/7/2022

**பெறுநர்:-** தாளியூர் பேரூராட்சியின் அனைத்து பதிவு பெற்ற ஒப்பந்ததாரர்கள்.

**நகல்:**

1. மாவட்ட ஆட்சியர், பேரூராட்சிகள் பிரிவு, மாவட்ட ஆட்சியர் அலுவலகம் கோயம்புத்தூர் அவர்களுக்கு பணிந்து அனுப்பப்படுகிறது.
2. பேரூராட்சிகள் உதவி இயக்குநர், மாவட்ட ஆட்சியர் அலுவலகம் 3-ம் தளம், கோயம்புத்தூர் மண்டலம் அவர்களுக்கு பணிந்து அனுப்பப்படுகிறது.
3. உதவி செயற் பொறியாளர், (பேரூராட்சிகள்) கோயம்புத்தூர் மண்டலம் அவர்களுக்கு தகவலுக்காக
4. இளநிலை பொறியாளர், வேடபட்டி பேரூராட்சி (தொகுப்பு).
5. அலுவலக விளம்பர பலகைக்கு.

Scanned By Camera Scanner